# தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை


ஆசிரியர்:
டாக்டர் இரா. நாகசாமி



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நூலகம்
நூல் சேர்க்கை


அட்டைப்படம்:
இருளப்பட்டி நடுகல்


முதற் பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. வெளியீடு எண். 61

[illegible] அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.



வரலாற்று நூல்களை வாங்கிப் படியுங்கள்

# தகடூர்

## கரும்பு வந்தது

தமிழக வரலாற்றுக்குத் தனித்தொரு புகழைத் தேடித்தந்துள்ளது தகடூர். பண்டைய தகடூரையே இப்பொழுது 'தர்மபுரி' என்றழைக்கிறார்கள். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் கூட இதன் பெயர் தகடூர்தான். இது சுமார் 2000 ஆண்டுகளாக வழங்கி வந்த பெயர். தகடூர் என்று சொல்லும் போதே அதியமான் நெடுமான் அஞ்சியின் நினைவுதான் வரும். அவன் தலைநகராகக் கொண்டு ஆண்டது இவ்வூர்தான். அவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிய அவ்வையார் இங்குதான் அவனது சபையை அலங்கரித்தார். தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை அவ்வையாருக்குக் கொடுத்து, பெரும்புகழ் தேடிக்கொண்டானே அதியமான், அவன் வாழ்ந்த ஊர் இதுதான் என்று இதன் பெருமையை எண்ணி எண்ணி மகிழலாம். கரும்பு என்றாலே தித்திக்கும். கரும்பை முதன் முதலில் பயிர் செய்யக் கண்டுபிடித்தவன் அதியமான்தான்.

# பெண்ணேஸ்வரமடம்

தகடூர் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத்தில் பெண்ணேஸ்வரமடம் என்ெருரு ஊர் இருக்கிறது. இவ்வூரும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஊராகும். இந்த ஊரில் உள்ள சிவன் கோயிலுக்குப் பெண்ணையாண்டார் கோயில் என்பது பழைய பெயர். இந்தக் கோயில் 3-ஆம் குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்து சிறப்புப் பெற்றிருக்கிறது. மூன்ருவது குலோத்துங்கன் தானே இக்கோயிலுக்கு வழிபாட்டுக்கு ஊரை அளித்திருக்கிருன். அவனுக்கு அடியானுன குலோத்துங்க சோழத் தகடாதராயன் திருவிளக்கு வைத்திருக்கிருன். தகடூரின் பெயர் கொண்டு தகடாதரர்யன் என்ற பெயரில் ஒரு குடியே இருந்திருக்கிறது. சோழர் காலத்தில் இங்கு சேரமாள் பெருமான் மடம் என்று ஒன்று இருந்திருக்கிறது. இவரைப் பற்றிய முன்னரே பார்த்தோம் இது இப்பகுதியைச் சார்ந்தவர்கள், சேரமான் பெருமாளிடம் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டும்

... பூர்வதேசம் கங்கையும்
...ம் கொண்ட கோப்பரகேசரி
... உடையார் ஸ்ரீராஜேந்திர
...வர்க்கு யாண்டு இருபத்தொன்ப
...(கி.பி. 1041) நிகரிலி சோழ மண்ட
...ர் நாட்டுப் புறமலை நாட்டு
...டைய மகாதேவர் கோயில்
... முகமண்டபமும் எடுப்பித்
...டைவையிரியரான வியளன்
...யண்டரான இராஜேந்திர
...ரியூர் நாடுடையானான உத்தம
...புறமலை நாடாழ்வேன். தீர்த்தமலை
...க்கு திருநந்தா விளக்கு இரண்
...திருமடைப்பள்ளிப் புறமாகக் குடுத்த
...முதலியும், அவ்வடி மங்கலமும்,
...நாட்டில் அலையூரும் குடுத்தேன்.

...ஆண்டில் இவனுடைய அடியான்
...படிச் சோழன் ஆதி என்பவன் இந்தக்
...கோயிலில் க்ஷேத்திரபாலர் கோயிலும்,
...டேஸ்வரர் கோயிலும் கட்டி வைத்

# தீர்த்தமலை

தகடூர் நாட்டில் உள்ள மலைகளில் தீர்த்த மலை சிறப்பு பெற்றது மலை. மீது துர்க்கைக்கு மிகவும் பழங்காலம் தொட்டு கோயில் இருந்திருக்கிறது. அங்கு பல்லவர் காலதுர்க்கை ஒன்று இருக்கிறது. துர்க்கை எட்டுக்கரங்களுடன் நின்ற நிலையில் இருக்கிருள். அவளது கரங்களில் சக்கரம், கத்தி, சங்கு, வில், கேடயம், மணி, முதலியன இருக்கின்றன. இந்த சிற்பத்திலே 'ஸ்ரீ பகவதி குருச்சூலி கோடுடைய..., என்று வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதுபோல் தெய்வத்தின் பெயரும், அந்தச் சிற்பத்திலேயே எழுதப்பட்டிருப்பது மிகவும் அரிதாகும். இந்த மலையின் மேல் சிவன் கோயில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோயிலை முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் 'உத்தம சோழ புறமலை நாடாழ்வான்' என்பவன் புதியதாகக் கட்டியிருக்கிறுன். அதற்கு வழிபாட்டுக்குச் சில ஊர்களையும் கொடுத்திருக்கிறுன். அதைக் கூறுகின்ற கல்வெட்டு கீழ்வருமாறு உள்ளது.

# அதியமான் பெருவழி

அதியமான்கள் தமிழகத்துக்கு மற்றும் ஒரு சிறப்பினைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் தர்மபுரியிலிருந்து கிழக்கு நோக்கிப் பலகாத தூரத்துக்கு ஒரு பெருவழியை அமைத்திருக்கிறார்கள். அதற்கு "அதியமான் பெருவழி" என்று பெயர். அது 'நாவற்தாவளம்' என்ற ஊர்வரை செல்கிறது. இந்த பெருவழியில் ஒவ்வொரு காதத்திலும் ஒரு கல் நட்டு இன்னும் எவ்வளவு காதம் இருக்கிறது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். உதாரணமாக "அதியமான் பெருவழி-நாவற் தாவளத்துக்கு காதம் 29" என்று எழுதப்பட்டிருக்கிறது. எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கும் [illegible]காக 2 பெரிய துளைகளும், 9 சிறிய துளைகளும் இட்டிருக்கிறார்கள். இது '29' என்பதைக் குறிக்கும் இந்த மைல்கல் தகடூரிலேயே கிடைத்துள்ளது. தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையினரும் செட்டியபட்டி என்ற ஊரில் 27 காதம் என்று குறித்துள்ள கல் ஒன்றினைக் கண்டு பிடித்துள்ளனர். இவை 700 ஆண்டுகட்கு முன்பு சீரான முறையில் அதியமான்கள் பெருவழி அமைத்ததைக் காட்டுகின்றன.

# விடுகாதழகிய பெருமாள்

மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தில் அவனது சிற்றரசனுக இங்கு இராஜ ராஜ அதியமான் என்பவன் ஆண்டான். அவனுக்கு விடுகாதழகிய பெருமாள் என்றும் பெயர் உண்டு. அரூர் வட்டம் கம்பைய நல்லூரில் இவன் கோயில் எடுத்ததை கூறும் அழகிய பாடல் கல்வெட்டு இதோ:

உரை மருவும் குலோத்துங்க சோழ தேவர்க்கு
உரைத்த யாண்டு இருபதின்மேல் இரண்டில் [பெண்ணை

கரை மருவும் சிறுக்கோட்டை குளன் நாகை நாய-
கற்களித்துக் கற்றளி தன்பேர் இட்ட காரணைய [கையான்

திரை மருவும் தடங்கமலத் தகடை மன்னன்
செழும்பாலி பெண்ணை பொன்னித் திருநதி [மூன்றுடைய

விரை மருவும் தார்மார்வன் ராஜராஜ அதிகன்
விலங்காமொழி விடுகாதழகிய பெருமாளே!

இவன் சிறந்த சிவனடியான். கல்வெட்டில் 'நமச்சிவாய என்ற சொல்லையும் விலங்காமொழி என்ற தன் பெயரையும் சக்கரம் போல எழுதியிருக்கிறுன்.

# நிகரிலி சோழ மண்டலம்

தகடூர், சங்க காலத்திலிருந்து தகடூர் நாட்டில் இடம் பெற்றிருந்தது. கி. பி. 10-ம் நூற்றாண்டில் தகடூர் நாடு சோழப் பேரரசர்களால் வெற்றிக் கொள்ளப்பட்டது. பராந்தக சோழன் காலத்திலிருந்து 13-ம் நூற்றாண்டின் நடுப் பகுதி வரை சோழர் ஆட்சியிலிருந்தது. முதல் இராஜ ராஜசோழன் தன் ஆட்சியின் கீழிருந்த எல்லா பகுதிகளையும் அளந்து, வகைப் படுத்தி சீர் செய்தான். அப்பொழுது ஒவ்வொரு பகுதிக்கும் புதிய பெயர் சூட்டினான். தகடூர் நாடு இருந்த பகுதியை 'நிகரிலி சோழ மண்டலம்' என்றழைத்தான். அதிலிருந்து தகடூர் நிகரிலி சோழ மண்டலத்து, தகடூர் நாட்டுத் தகடூர் என்று அழைக்கப்பட்டது. முதல் குலோத்துங்கன் காலத்துக்கு பிறகு சில காலம் போசளர் என்ற மைசூர் பகுதியை ஆண்ட அரசரின் கீழிருந்தது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் (13-ம் நூற்றாண்டில்) இதை விஜய ராஜேந்திர மண்டலம் என்று பெயர் மாற்றியிருக்கிறான்.

## சாணாயிரம், முழமாயிரம்

வண்ணானைக் கும்பிட்டார் திருப்பணி செய்து இந்தக் கோயிலுக்கு "சாணாயிரம் முழமாயிரம் முடையார் கோயில்" என்று பெயர் கொடுத்தார். இதற்கு திருவேளா லீச்சுரம் என்றும் பெயர் இருந்தது. அப்பொது இங்கு குலோத்துங்க சோழனின் சிற்றரசனாக 'அதியமான்' என்பவன் ஆண்டான். இக்கோயிலில் அம்மன் சன்னதி அடிப்பகுதியில் வெளியில் ராமாயணக் காட்சிகள் முழுவதும் சிற்பமாக உள்ளது ஒரு சிறப்பாகும். இக்கோயிலின் திருச்சுற்றுக் கோபுரத்தை 450 ஆண்டுகளுக்கு முன் திம்மய்யநாயக்கர் என்பவரின் நன்மைக்காக இராம நாயனார் பொன்னக்கூத்தர் என்பவர் கட்டிவைத்தார்.

இங்கு கி.பி. 12-ம் நூற்றாண்டில் கோச்செங்கண்ணீச்சுரமுடையார் என்ற கோயிலிருந்தது என அரியரநாதசாமி கோயில் கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் இராஜராஜன் காலத்தில் 'இராஜராஜீச்சுரம்' என்ற கோயில் கட்டப்பட்டது. அதுதான் இப்பொழுது அரியரநாதர் கோயில் என்று மருவி வழங்குகிறது போலும்!

## வண்ணனைக் கும்பிட்டார்

...ருக்குப் பிறகு சில காலம் இந்த கோயில்கள் வழிபாடில்லாமல் இருந்தன. ...ரும் குலோத்துங்கன் காலத்தில் திருத் ...க்குப் பக்கத்தில் உள்ள திருக்காளத் தியிலிருந்து ஒரு பெரியவர் இங்கு வந்தார். அவர் பெயர் 'வண்ணானைக் கும்பிட்டார்'. அறுபத்துமூன்று சைவ நாயன்மார்களில் 'சேரமான் பெருமாளும் ஒருவர் ஆவர். ஒரு நாள் அவர் வீதியில் சென்று கொண்டிருந் தார். வண்ணான் ஒருவன் உப்பு மண்ணை சுமந்து கொண்டு எதிரில் வந்து கொண் டிருந்தான். அப்பொழுது தூற்றல் போட் ...ு உப்புமண் அவன் உடலில் நனைந்து வெள்ளையாக காட்சியளித்தது. அரசன் ...சேரர் பெரும் சிவபக்தர். அவ்வண் ணானைக் கண்டதும் சேர மன்னனுக்கு வெண்ணீறு பூசிய சிவனடியார் நினைவு வந்தது. அவ்வண்ணானின் காலில் விழுந்து அடிபணிந்தார். அதனால் சிவனடியாரான அப்பேரரசனுக்கு "வண்ணானைக் கும்பிட் டார்" என்று பெயர். அதேபெயரில் தஞ் ...ருக்கு வந்த அந்த பெரியாருக்கும் 'வண் ணானைக் கும்பிட்டார்' என்று பெயர்.

# நூளம்பர் கோயில்

இதற்குப் பிறகும் இப்பகுதி நூளம்பர் என்ற சிற்றரசர் குடியின் கீழ் வந்தது. அவர்கள் பல்லவர் வழிவந்தவர்கள். அவர்களும் பல்லவர்களைப்போல கலையில் மிகவும் ஈடுபட்டவர்கள். தகடூரில் இரண்டு கோயில்களை இவர்கள் கட்டியிருக்கிறார்கள். கி.பி. 8,9-ம் நூற்றாண்டில் இவர்கள் கட்டிய கோயில்கள்தான் இன்று தகடூரில் கோட்டைமேட்டு ஈசுவரன் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில்களின் முன் மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் மிகமிக அழகான சிற்பங்களைக் கொண்டுவிளங்குகின்றன எழில் உருவாக நடராஜர் ஆடுவது போல மேல் விதானத்தில் சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள்! தமிழ் நாட்டில் நூளம்பர்கள் தோற்றுவித்த எழிலார்ந்த கோயில் இதுதான். இதுபோல் வேறு எங்கும் காண முடியாது. இக்கோயிலை மல்லிகார்ஜுனர் கோயில் என்றும் கூறுகிறார்கள். இக்கோயிலின் உள்ளே சிவன் கோயிலும் அம்மன் கோயிலும் உள்ளன. இரண்டும் நூளம்பர்கள் கட்டிய கோயில்கள்தாம்.

# கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ அரிமிதைய மாவலி வாண
ரையர் கங்கநாடும், புற மலைநாடும், கோயி
நாடும் கோவூர் நாடும் தாயனூர்
நாடும், பற்ற நாடும் ஆள

அரையர்க்கு தான் ஆகி பிள்ளை கொண்டு உள்
இருந்து வஞ்சித்து நாடு கொண்டான்
நாளம்பன்

அவர் போரில் துஞ்சின பின்னை

தேவிமார் கருப்பிணி அருளராக அவளைக்
காத்திருந்து ஆண்பிள்ளை பெறுவதும்
தகடூர் புகுந்து நாளம்பன் பலத்தோடே
துளிந்து நாடு பாவினார் சங்கரக்குட்டியார்

அவரோடு உடன் புகுந்து

தகடூரில் பட்டார் நாகந்தை.

சங்கரக்குட்டியார் கல்நாடு.

தகடூரையும், பாணன் தேவியையும்,
குழந்தையும் காத்த பெருமை பெற்றவர்
இச்சங்கரக்குட்டியார்.

## நாட்டையும் காத்தான்

இங்கு ஆண்ட கங்கர்களில் ஸ்ரீபுருசன், 'சிவமாறன்' என்பவர்கள் சிறந்தவர்கள். பாணர்களில் 'மாவலி வாணதிராயர்' என்பவர்களும் ஆண்டிருக்கிறார்கள். கி.பி. 8-ம் நூற்றாண்டில் மாவலி வாணதிராயன் என்பவர் ஆண்டார். அவரோடு நட்புறவு கொண்டாடி நாளம்பன் என்பவன் சேர்ந்து கொண்டான். ஆனால் அவன் வஞ்சகன். அவ்வாண அரசரை வஞ்சித்துத் தகடூரைக் கைப்பற்றிக் கொண்டான் அந்நாளம்பன். நல்லவேளையாக வாண அரசர்க்கு சத்தியமார்கப்பணிபுரிய சங்கரக் குட்டி என்பவர் இருந்தார். வாண் அரசனுடைய தேவி கரு உற்றிருந்தாள். அவளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்து குழந்தை பிறக்கும் வரையில் காப்பாற்றினார். அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதன் பின்னர் சங்கரக் குட்டியார் நாளம்பனைவிரட்டியடித்து தகடூரைக் கைபற்றினார். அந்தச் சண்டையில் ஒரு வீரன் இறந்து போனான். அதைக் கூறும் நடுகல் கிடைத்துள்ளது.

# நாமக்கல் அதியேந்திரன் கோயில்

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான்கள் கலைக்குப் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் சோமன் என்றும் அதியேந்திரன் என்றும் புகழ்பெற்ற ஒரு அதியமான் அரசன் ஆண்டிருக்கிறான். அவன் நாமக்கல் என்ற இடத்தில் மலையைக் குடைந்து இரண்டு குகைக் கோயில்களைத் தோற்றுவித்திருக்கிறான். ஒன்று நரசிம்மருக்கு எடுக்கப்பட்டது. மற்றது பள்ளிகொண்ட பெருமாளுக்கு எடுக்கப்பட்டது. இவை இரண்டிலும் மிகவும் எழில் வாய்ந்த சிற்பங்கள் இருக்கின்றன. எவ்வாறு மாமல்லபுரத்துப் பல்லவர் சிற்பங்கள் புகழ்பெற்றனவோ அதேபோல் நாமக்கல் குகைக் கோயில்களும், அச்சிற்பங்களும் உலகப் புகழ்பெற்றவை. அங்கு அதியேந்திரனின் கல்வெட்டுகளும் இருக்கின்றன அக்கல்வெட்டில் ஒன்று அதியேந்திர விண்ணகரம் என்று இக்கோயிலின் பெயரைக் கூறுகிறது. இங்குள்ள சிற்பங்கள் பார்த்து இன்புறத்தக்கவை.

# நாட்டுப் பிரிவுகள்

தகடூரைத் தம் நகராக்கிக்கொண்டு ஆள பாணர், கங்கர், நூளம்பர் என்ற சிற்றரசர்கள் போட்டியிட்டுள்ளனர். இதனால் இப் பகுதிகளில் பலபோர்கள் நடந்துள்ளன. அப்பொழுது இப்பகுதியைத் தகடூர் நாடு என்று அழைத்தார்கள். இதை ஒட்டி,

புறமலை நாடு
கோலூர் நாடு
மேல்(மீ) கொன்றை நாடு
மேல்(மீ) வேணாடு
கங்க நாடு
கோயிலூர் நாடு
வேளாள நாடு
தாயனூர் நாடு
வேள்கவி நாடு
எயில் நாடு
மன்ன நாடு

என்று பல பகுதிகள் இருந்தன,

# பல்லவர்கால நடுகற்கள்

கி.பி. 5-ம் நூற்றாண்டிலிருந்து இந்தப் பகுதி பல்லவர்களின் கீழ் இருந்தது. பல்லவ அரசர்களில் சிறந்த சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகிய அரசர்களின் ஆட்சி இங்கு பரவி இருந்தது. அவர்கள் காலத்து பல கல்வெட்டுக்கள் இங்கு கிடைக்கின்றன. அவை 'வட்டெழுத்து' என்னும் ஒரு வகையான தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. இந்த எழுத்துக்களிலிருந்து தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு காலப்போக்கில் வளர்ச்சியடைந்தன என்று அறிகிறோம். மகேந்திரவர்மன் கால நடுகல் ஒன்றில் கீழ்வருமாறு எழுதி உள்ளது.

"கோ விசைய மஹேந்திரபருமற்கு
பதின்மூன்றாவது, கடிகாவின் அஞ்சிறுரு
மக்கள் பொற்கோவுரு, வீரவாணரைசரு
மக்கள் பொன்மோதறேரோடு
கரிப்பள்ளி எரிந்து பட்டாரு"

# தகடூர் நாட்டு நடுகற்கள்

அதியமானுக்கு நடுகல் எடுத்தது போல், இப்பகுதியில் வீரம் விளைவித்து தங்கள் உயிரை விட்ட பல வீரர்களுக்கு எடுக்கப் பட்ட நடுகற்கள் இங்கு கிடைத்துள்ளன. சங்ககாலத்திற்குப் பிறகு தகடூர்ப் பகுதியின் வரலாற்றை அறிந்துகொள்ள உதவுபவை இந்நடுகற்கள் தாம். தமிழ் நாட்டில் கிடைத் துள்ள நடுகற்களில் மிகவும் தொன்மை யான நடுகல் இம்மாவட்டத்தில் 'இருளப் பட்டி' என்ற இடத்தில் கிடைத்துள்ளது. விண்ணவர்மன் என்ற அரசன் காலத்தில், அவன் சிற்றரசனாகத் திகழ்ந்த பாண அர சனின் வீரர் இருவர் போரில் வீரமரணம் எய்தினர். அவர்களுக்கு எடுத்த வீரக் கற்கள் இவைதாம். இவை மிகவும் தொன்மையான எழுத்துக்களில் எழுதப் பட்டுள்ளன. இதுபோல பல நடுகற்கள் இந்தப் பகுதியில் கிடைத்திருக்கின்றன. இவ்வீரக்கற்களில் அவர்களது உருவங்க ளும், அவர்களது பெயர்களும், எப்பொ ழுது எந்தப் போரில் மாண்டார்கள் என்ற செய்திகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

# அதியனுக்கு நடுகல்

அதியமான் போரிடும்போது மார்பில் வேல் பாய்ந்து இறந்து போனான். அவன் இறந்தபோது அவ்வையார் உடனிருந்து மிகவும் வருந்தி பாடியிருக்கிறார். 'எப்பேர்ப் பட்ட பெரும் வள்ளல் நீ! உன் மார்பில் பாய்ந்த இந்த வேல் அனைத்துத் தமிழ் மக்களின் கண்களையும் கலங்கச் செய்த வேல் புலவர்களெல்லாம் உன் மறைவால் பேச்சு இழந்து, தம்பித்து நிற்கிறார்கள். இனித் தமிழில் பாடுபவர் யார் இருக்கிறார்கள். உன்னைப்போல், பாடுபவர்களுக்கு கொடுப் பவர்கள்தான் யாரிருக்கிறார்கள்?' என்று பாடுகிறாள் ஔவை மூதாட்டி...

'அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன் அருநிறத்தியங்கிய
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ [வேலே
இனிப் பாடுநரும் இல்லை; பாடுநர்க் கொன்றீகு
[நருமில்லை

இறந்துபோன அதியமானை ஈமத் தீயில் இட்டு எரித்தார்கள். அவனுக்கு நடுகல் எடுத்தார்கள். அதைப்பார்த்து அவ்வை யார் எழுதிய பாடல், படிப்போர் மனதை உருக்கும்.

# தகடூர் யாத்திரை

சேர மன்னர்களும், அதியர்களும் ஒரே குடியில் வந்தவர்கள் என்பர். இருப்பினும் சில சமயம் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டார்கள். பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னன் அதியமானோடு போரிட்டான். அவன் திருச்சி மாவட்டம், கருரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். அங்கிருந்து கிளம்பி தகடூர் மீது படையெடுத்து வந்தான். தகடூர்ப் போர் மிகவும் கடுமையான போராக இருந்தது. இப்போரில் அதியமானின் மகன் வீரத்துடன் போரிட்டு இறந்து போனான். இந்தப் போரைப் பற்றி ஒரு பெரிய காப்பியம் எழுதப் பட்டது. அதற்குத் 'தகடூர் யாத்திரை' என்று பெயர். அந்த நூலின் பெயர்தான் கிடைத்திருக்கிறதே ஒழிய, அந்த நூல் கிடைக்கவே இல்லை. மறைந்துபோய் விட்டது. அதனால் "தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை" என்று அச் சேர மன்னன் பெயர் பெற்றான்.

# அதியமான் நெடுமான்

அதியமான்களில் மிகச் சிறந்த புகழோடு விளங்கியவன் நெடுமான் அஞ்சி. அவனுக்கு மிகவும் உற்றவராகத் திகழ்ந்தவர் அவ்வையார். அதனால் தமிழுக்குப் பல அரும் பாடல்கள் கிடைத்துள்ளன. அவ்வையாருக்கு நெல்லிக்கனி கொடுத்ததால் வள்ளல் பெருமக்களில் ஒருவனாக அவனைப் புலவர் பாடினர். அவன் பல போர்களில் வெற்றி கண்டிருக்கிறான். தொண்டைமானோடும், மலையமானோடும் போரிட்டிருக்கிறான். ஒரு சமயம் அவன் போர் புரிந்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற செய்தி வந்தது. தன் போர்க்கோலத்தைக் கூட கலைக்காது ஓடி வந்து தன் மகனைக் கண்டு மகிழ்ந்தானாம் அம்மன்னன். அவன் மகன் பொருட்டெழினி. அதியமான் நெடுமான் அஞ்சியைப்பற்றி உள்ள ஒவ்வொரு சங்கப்பாடலும் படித்துப் படித்து இன்புறத் தக்கவை.

கற்கால மனிதர் வாழ்ந்த சிற்றூர்களை ஒன்றாக்கி இப்பகுதியை வளப் படுத்தி நாடாக்கியவர் அதியமான் குலத்தவர்கள். அவர்கள் 2300 ஆண்டுகளுக்கு முன் பெரும் புகழோடு ஆண்டிருக்கிறார்கள். அவர்களது புகழ் இந்தியாவின் வடக்கே பாடலிபுத்திரம் வரையில் பரவியிருந்தது. மௌரியப் பேரரசன் அசோகன் தனது கல்வெட்டுக்களில் 'சதியபுத்ரன்' என்ற அரசர்களைக் குறிக்கிறான். தகடூர் அதியமான் (புத்திரன் அல்லது மகன் என்பது மக்கள் வழக்கில் 'மான்' என்று வரும்) என்பவனே அசோகன் கூறும் 'சதியபுத்ரன்' ஆவான்; எனவே அசோகன் அவையும் போற்றும் அளவுக்கு புகழ் விரித்து ஆண்டவர்கள் இத்தகடூரை ஆண்ட அதியர்கள். அவர்களை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியருக்குச் சமமானவர்களாக வைத்துப் பேசுவான் அசோகப் பேரரசன்.

# கற்கால ஓவியம்

அதியமான் ஆட்சி பரவி இருந்த பகுதியைத் தகடூர் நாடு என்று அன்று அழைத்தனர். அதை இப்பொழுது தருமபுரி மாவட்டம் என்கிறோம். தருமபுரி மாவட்டத்தில் கற்காலத்திலிருந்தே, அதாவது 10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் [illegible] பகுதியில் நிகழ்ந்திருக்கிறது. [illegible] இடங்களில் பழைய கற்கருவிகளும் புதிய கற்காலக் கருவிகளும் கிடைத்திருக்கின்றன. புதிய கற்காலத்தில்தான் அதாவது 7000 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இப்பகுதியில் மனிதன் சிறு சிறு ஊர்களை அமைத்துக் கொண்டு, நிலத்தைப் பயிர் செய்தும், [illegible] விட்டு விலங்குகளைப் பழக்கியும், [illegible] வளர்த்தும் வாழத் தொடங்கினான். இங்கு பருகூருக்கு அருகில் மல்லப்பாடி என்ற ஊரில் அவன் வரைந்த பெரும் கற்கால ஓவியங்கள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் குதிரை வீரர்களின் ஓவியங்களும், காளை மாடும் அழகாகத் தீட்டப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் கிடைத்துள்ள ஓவியங்களில் இதுவே மிகப் பழமையான ஓவியமாகும்.